9th September 1958]

Sri N. R. THIAGARAJAN : இராமனுதபுரம் ஜில்லா எக்ஸ் ஜமீந்தாரி ஏரியாவின் அபிவிருத்தி பற்றி விசாரிப்பதற்கு ஸ்ரீ அருள்தாஸ் என்பவரை டெவலப்மென்ட் கமிஷனராக நியமித்து, அவர் ஒரு ரிபோர்ட் தயார் செய்து, மூன்று, நான்கு வருஷங்களுக்கு முன் சர்க்காருக்குச் சமர்ப்பித்திருக்கிறரே, அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறர்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்காக தனி கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

Sri S. LAZAR : முதுகுளத்தூர் பகுதி மிகவும் பிற்போக்காக இருக்கும் காரணத்தால் அங்கு தனிப்பட்ட சலுகைகள் அளித்து, அபிவிருத்தி வேலைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதேபோன்று மிகவும் பிற்பட்ட முறையிலே இருக்கும் திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலூகா போன்ற இடங்களிலும் இதுபோன்று தனிப்பட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இராமனுதபுரம் ஜில்லா வின் கிழக்குப் பகுதி மட்டுமல்லாமல், ராஜ்யத்தில் இன்னும் சில இடங்களும் பிற்பட்ட நிலையில் இருக்கின்றன. அந்த பிற்போக்குப் பகுதி களை எல்லாம் முன்னுக்குக் கொண்டுவருவதற்கு எல்லா நடவடிக்கை களையும் எடுக்க சர்க்கார் முயற்சிக்கும்.

Sri K. R. VISWANATHAN : அம்மாதிரி அபிவிருத்தித் திட்டங்கள் மிகவும் பிற்போக்குப் பகுதியாக இருக்கும் உடையார்பாளையம் தாலூகாவில் எடுத்துக்கொள்ளப்படுமா ? முதுகுளத்தூரில் நடந்ததைப் போன்ற கலவர நிகழ்ச்சிகள் நடந்த பிறகுதான் அபிவிருத்தித் திட்டங்கள் புகுத்த வேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இல்லை என்று நினைக் கிறேன். ஆகையால், உடனடியாக இம்மாதிரி மிகவும் பின் தங்கிய இடங்களில் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுவர சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அம்மாதிரி நிகழ்ச் சிகள் அங்கு ஏற்படாது என்ற பூரண நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது ஒருபுறமிருக்க, எல்லாப் பிற்போக்கான பகுதிகளையும் முன்னுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டி ருக்கிறது.

Sri A. GOVINDASAMY : அந்தப் பகுதியில் தேசிய அபி விருத்தித் திட்டம் வந்த பிறகு புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை, வெட்டப்பட்ட கிணறுகள் எத்தனை என்று அரசாங்கத்தினிடம் கணக்கு இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : உடனடியாக என்னிடம் புள்ளிவிவரம் இல்லை. அதற்காக தனி கேள்வி கேட்டால் பதில் கொடுக்க முடியும்.

Mr. SPEAKER : 102, 103, 104 ஆகிய இம்மூன்று கேள்விகளையும் ஒன்ருக எடுத்துக்கொள்ளலாம்.

Seed farms

* 102 *Q.*—**Sri A. VEDARATHNAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விதைப்பண்ணைகள் ஏற்படுத்துவதற்காக எவ்வளவு நிலம் வாங்க உத்தேசம் ?

(ஆ) அந்த நிலங்களை வாங்க உத்தேசித்திருக்கும் இடங்கள் எவை ?

(இ) இந்த நிலங்களுக்கு கொடுக்க உத்தேசித்திருக்கும் கிறையம் எவ்வளவு ?

[9th September 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a), (b) & (c) The answer [a] is placed on the table of the House.

* 103 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாகாணத்தில் எத்தனை விதைப் பண்ணைகள் ஆரம்பித்து நடைபெறுகின்றன ?

(ஆ) இன்னும் அதிக விதைப் பண்ணைகளை ஆரம்பிக்கும் உத்தேச முண்டா ?

(இ) அப்படியானால், எங்கெங்கே ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 154 (one hundred and fifty-four) farms.

(b) Yes; it is the intention to open 206 more farms in the current year.

(c) It is obviously not possible now to say where the future farms will be located. They will be evenly distributed in the various districts according to the soil composition, irrigation and other facilities that are available and according to the seed crops that are to be grown.

* 104 Q.—SRI T. VELUCHAMI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு பொறுக்கு விதைகளும் பூச்சி மருந்துகளும் கோவாப்பரேடிவ் ஸ்தாபனங்கள் மூலமாக சப்ளை செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the affirmative.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவிலே ஏற்படுத்தப் பட்டிருக்கும் இந்த விதைப் பண்ணைகளெல்லாம் வெட் ஏரியாவிலே, அதாவது நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்குள்ள ட்ரை ஏரியாவில் அதாவது பாசன வசதி இல்லாத மானுவாரிப் பிரதேசங்களில் ஏதேனும் விதைப் பண்ணைகள் உண்டா ? இல்லையானால், ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் பதில் அளிக்கமுடியும்.

SRI T. VELUCHAMI : இப்பொழுதிருக்கும் நிலைமையில் விவசாய டெமன்ஸ்ட்ரேடர்களுடைய வேலைப் பளுவைக் குறைப்பதாக இருந்தால், அவர்கள் விவசாய அபிவிருத்தி வேலைகளை மிகவும் நன்றாகக் கவனிக்க முடியும். கூட்டுறவு ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் கருதியும் விவசாய டெமன்ஸ்ட்ரேடர்களிடமிருந்து அதிக வேலை வாங்கக்கூடிய நிலைமை கருதியும், பொறுக்கு விதைகள், பூச்சி மருந்துகள் போன்றவைகளை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விநியோகம் செய்யும் முறையை சர்க்கார் கையாளுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொறுக்கு விதைகளை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிப்பதுபற்றி இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகிறது. தேசீய வளர்ச்சித் திட்டங்களில் இரண்டு ப்ளாக்குகளில் இதைப் பரீட்சார்த்தமாக நிறைவேற்றிப் பார்க்கலாம் என்று இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பூச்சி மருந்துகள் கொடுக்கும் விஷயத்திலே, அதைப்பற்றி கொஞ்சம் டெக்னிகலாக தெரிந்தவர்கள்

[a] Printed as Appendix II on page 482 infra.